# யுத்த காண்டம்

வானரப்படை அணிவகுத்து நின்றது. இராம இலட்சுமணர்கள் கடல் போன்ற அப்படையுடன் தெற்குத் திசை நோக்கிப் புறப்பட்டு விட்டனர். மிக்க விரைவில் அவர்கள் மகேந்திரமலையை அடைந்து விட்டனர்.

அநுமன் இலங்கையை அழித்தபின் இராவணன் தெய்வத் தச்சனை வரவழைத்தான். புதிய நகரத்தைத் தோற்றுவிக்கும்படி உத்தரவிட்டான். எரிந்து போன இலங்கை மாநகரம் மிக விரைவில் புதுப்பிக்கப்பட்டது. முன்னிலும் அழகான மாட மாளிகைகளும், அரண் மனைகளும், மணிமண்டபங்களும் அமைக்கப்பட்டன. இலங்கை மாநகரம் பன் மடங்கு அழகுடன் விளங்கு வதைக் கண்ட இராவணன் ஒருவாறு சினம் தணிந்தான்.

மந்திராலோசனை மண்டபம் அழகுற அமைக்கப் பட்டிருந்தது. அரசன் தன் அமைச்சர்களுடன் கலந்து முக்கியமான விஷயம் குறித்துப் பேச விரும்பினான். மண்டபத்திற்கு வெளியே பலத்த காவல் போடப்பட்டிருந்தது.

இராவணன் மந்திராலோசனைக் குழுவினை ...க்கினான். "அமைச்சர்களே! ஒரு குரங்கினால் என் ...ம் மட்டும் அழியவில்லை. என் பெருமையும் ...ந்து விட்டது. சுற்றம் அழிந்தது மட்டுமன்று, ...யும் அழிந்தது. திக்கெட்டும் இச் செய்தி ...விட்டது. ஆனால் அக்குரங்கை நாம் அழிக்க ...லை. பெரும் பழி அல்லவா நம் மீது சேர்ந்து ...து," என்றான்.

விட்டன. பாம்புபோல் சீறி எழுந்த இராவணன் இராமனின் திண் தோள்களைக் குறிவைக்கலானான். ஆனால் புன்சிரிப்புடன் இராமன், கணைகள் பாய்ந்து வருமுன் இராவணனின் கரத்திலிருந்த வில்லையே துண்டித்துவிட்டான். மற்றொருவில்லை எடுக்க முடியாதபடி அம்புகளை எய்து தடுத்துவிட்டான்.

இராவணன் தேரை விட்டுக் குதித்தான். அத் தருணம் பார்த்து இராமன் அவனுடைய கிரீடங்களைக் குறித்து அம்பெய்தான். அப்பாணங்கள் இராவணனின் மணிமகுடங்களைப் பறித்துக் கொண்டுபோய்க் கடலில் தள்ளிவிட்டன.

மகுடங்களைப் பறி கொடுத்த இராவணன் வெட்கி நின்றான். கையிலே வில்லில்லை. தலையிலே மணி முடியில்லை. தன்முன் தலைகுனிந்து நின்ற இராவணனை நோக்கி "இன்று நான் உன்னைக் கொல்வது எளிது. ஆயினும் நான் அதைச் செய்யப் போவதில்லை. சிறைவைத்திருக்கும் தேவியை விட்டு விடு. விபீஷணனிடம் இலங்கையின் ஆட்சியைத் தந்துவிடு. இல்லை, போரிடுவதுதான் உன் முடி வென்றால், இன்று நீ தனியனாக நிற்கிறாய். இன்று போய் நாளை வா!" என்றான்.

முதல் நாள் போர் இவ்விதமாக முடிந்தது.

தலைகுனிந்தவாறே நடந்தான் இராவணன்.

மலர் மஞ்சம் அவனுக்கு முள்ளாக உறுத்தியது. மாலியவானிடம் நடந்தவற்றை விவரமாகக் கூறினான்.

''இராவணா! நான் முன்னரே இராமனின் பெருமையை உனக்குக் கூறினேன். நீ என்னை இகழ்ந்து விரட்டி விட்டாய்'' என மாலியவான் கூறியதும் அமைச்சன் மகோதரன் கடும் கோபம் கொண்டான். ''மாலியவானே! வீரர்களுக்கு வெற்றியும் தோல்வியும் ஒரு பொருட்டல்ல. வெற்றி அல்லது வீர மரணம் இதுதான் வீரனின் குறிக்கோள். மன்னவா! தயக்கம் ஏன்? உறக்கத்திலாழ்ந்திருக்கும் தங்கள் தம்பியாரை எழுப்புங்கள். அவரைக் கண்டவுடன் குரங்குகள் அஞ்சி ஓடிவிடும்'' என்றான்.

கும்பகர்ணனைத் துயிலெழுப்புவதென்பது கடினமான செயல். இராவணனின் உத்தரவைப் பெற்ற வீரர்கள் இரும்புத்தூண்களைக் கொண்டு தலையிலும், காதிலும் மோதினார்கள். உறக்கம் கலையவில்லை. குதிரைகளை மிதிக்கவிட்டார்கள். குதிரைகள் மிதித்தும் துவைத்தும்கூட உறக்கம் கலையவில்லை. இராவணன் ஆயிரம் மல்லர்களை அனுப்பினான். அவர்களால் கும்பகர்ணனை நெருங்கவே முடியவில்லை. அவன் விட்ட மூச்சுக் காற்று அவர்களை உள்ளே இழுத்து வெளியே தள்ளியது. அவர்கள் தவித்தனர். மிகவும் சிரமப்பட்டு அவனை நெருங்கியவர்கள் அவனுடைய மாபெரும் காதிலே ஊது கருவிகளைக் கொண்டு பலமாக ஊதினார்கள். என்ன செய்து பார்த்தும் உறக்கம் கலையவில்லை. கடைசியில் உலக்கைகளைக் கொண்டு கன்னத்தில் தாக்கவே கும்பகர்ணன் விழித்துக் கொண்டான். கண் விழித்ததும் அவனுக்கு அகோரப் பசி. 600 வண்டி சோற்றையும், நூற்றுக்

கணக்கான குடங்கள் கள்ளையும் குடித்து ஒருவாறு பசியாறினான். பணியாள்கள் இராவணன் அழைப்பதாகத் தெரிவித்ததும் கும்பகர்ணன் விரைந்து சென்றான்.

இராவணன் தம்பியை மார்புறத் தழுவிக் கொண்டான். ''கள்ளும் மாமிசமும் கொடுத்து உபசரித்தான். தன் கரத்தினால் வெண்பட்டாடை அணிவித்தான். ஆபரணங்களை அணிவித்தான். நெற்றியிலே வீரப் பட்டம் சூட்டினான். கவசமணிவித்தான். ஆயுதங்களைத் தந்து போர்க்கோலம் பூணச் செய்தான். கும்பகர்ணன் வியப்புடன் அண்ணனை நோக்கினான்.

''தம்பி!'' என்று அன்புடன் அழைத்தான் இராவணன். ''மனிதர்களிருவர், குரங்குப் படையுடன் வந்து இலங்கையைச் சூழ்ந்து முற்றுகை இட்டிருப்பதை நீ அறிவாய். இதுவரை எவரும் அடையாத வெற்றி அவர்களுக்குக் கிட்டியுள்ளது. இன்று நீ போர்க்களம் சென்று அவர்களை அழித்து வா'' என்றான் இராவணன்.

''அண்ணா! சீதையின் காரணமாகத்தானே இன்று போர் மூண்டுள்ளது! இன்னமும் நீங்கள் சீதையை விடாமலிருப்பது விதியின் கொடுமைதான். இராமனை வெல்வதென்பது இயலாத காரியம். அண்ணா அன்று நீ தரும வழியில் சென்றதால் வெற்றி பெற்றாய்! இன்று அதர்மத்தைப் பின்பற்றுவதால் நீ அழிந்துவிடுவாய். நான் இப்படியெல்லாம் சொல்வது உங்களுக்குப் பிடிக்காது. சீதையை விட்டு விடுங்கள்'' என்றான் கும்பகர்ணன்.

''உன்னை யோசனை கேட்க நான் அழைக்க வில்லை. போருக்கு அஞ்சும் நீ ஊனையும், கள்ளையும் அருந்தி விட்டுப் போய் உறங்கு. அல்லது உன் தம்பியைப் போல் நீயும் சென்று அந்தக் குரங்கு களையும் மனிதர்களையும் வணங்கித் துதிபாடு'' என வெறுப்பைச் சொற்களில் உமிழ்ந்தான் இராவணன்.

''யாரடா அங்கே! கொண்டுவா என் தேரை'' எனக் கர்ஜித்தான்.

''அண்ணா, என்னை மன்னித்து விடுங்கள். இதோ நானே போருக்குப் புறப்படுகிறேன். வெற்றியுடன் மீண்டும் வருவேன் என்பது உறுதியில்லை. பெரும் பாலும் நான் கொல்லப்பட்டு விடுவேன். அப்படி நான் இறக்க நேர்ந்தால் அண்ணா, நீங்கள் சீதையை விட்டு விடுங்கள். உங்களுக்கும் அரக்க குலத்திற்கும் அழிவைத் தேடிக் கொள்ளாதீர்கள்'' எனக் கூறி விடை பெற்றுக் கொண்டான் கும்பகர்ணன்.

கும்பகர்ணன் வருவதைக் கண்ட இராமன் பெருத்த மலை போன்ற உருவமுடைய இவன் யாரென்று நினைத்தான். அருகிலிருந்த விபீஷணனை வினவவும் 'இராவணனுக்குத் தம்பியும் எனக்கு அண்ணனுமான கும்பகர்ணன் என்பவன் இவன்தான்'' என்றான் விபீஷணன். தன் அண்ணனின் ஆற்றலை எடுத்துரைத் தான். பானை போன்ற காது உடையவன்; தவமிருந்து சிவபிரானின் கூரிய சூலப் படையைப் பெற்றுள்ளான். எமனையொத்தவன். காற்றைப்போல் வேகம் கொண்டவன். பெரும் தூக்கமுடையவன். அடங்காப்

பசியும் கொண்டவன். இவன் உறங்க ஆரம்பித்துவிட்டால் கண் விழிக்க நேரமாகும். இவன் இப்படி உறங்குவதால்தான் உலகம் பிழைக்கிறது. தேவியை விட்டு விடும்படி இராவணனுக்கு இவனும் புத்தி கூறினான். இராவணன் இணங்கி வரவில்லை. போரிட்டு உயிர் துறப்பதென்ற முடிவுடன் இங்கு வந்துள்ளான்'' என்றான் விபீஷணன்.அருகே நின்ற சுக்கிரீவன் ''சுவாமி இவனைக் கொல்வதாலோ, இவனுடன் போரிடுவதாலோ நமக்கென்ன பயன் ஏற்படப் போகிறது? இவ்வனையும் நம்முடன் சேர்த்துக் கொள்ளலாமே'' என்றான்.

''இதுவும் நல்ல யோசனைதான்'' எனக் கூறிய இராமன் ''இப்பொழுது இவனிடம் யார் செல்வது?'' என்றான். விபீஷணன் தான் சென்று வருவதாகப் புறப்பட்டான்.

தன் பாதங்களில் வணங்கிய தம்பியைக் கும்பகர்ணன் அன்புடன் தழுவிக் கொண்டான்.

''தம்பி எங்களை விட்டு விலகிய நீ நல்ல இடத்தை அடைந்துவிட்டாய். நற்பேற்றை அடைந்துவிட்டாய் என்றல்லவா மகிழ்ந்து கொண்டிருந்தேன். நீ மீண்டும் ஏனிங்கு வந்தாய்? பிறன் மனைவியைக் கவர்ந்த அண்ணன் நம் குலத்திற்கே அழிவும் இழிவும் தேடி விட்டான். நீயாவது வாழ்ந்திரு'' என்றான்.

விபீஷணன் தான் வந்துள்ள நோக்கத்தைத் தெரிவித்தான். ''அண்ணா நீயும் என்னைப் போல் இராமனைச் சரணடைந்து விடு. இராமன் எனக்

அளித்துள்ள இலங்கையின் ஆட்சியை நானுனக்குத் தந்து விடுகிறேன். தீய நெறியில் நடப்பவர்களை அண்ணனென்றும் தம்பியென்றும் பார்க்க முடியுமா? அண்ணா, பரசுராமன் தன் தாயையே வெட்டிக் கொன்றுவிடவில்லையா? உடம்பிலே புண் தோன்றினால் அதை அறுத்து விஷத்தை வெளியேற்றுவதில்லையா? அதைச் சுட்டுவிடுவதில்லையா?''

''தம்பி இது முடியாத காரியம்'' என மறுத்தான் கும்பகர்ணன். ''அண்ணனுக்காகப் போரிட்டு உயிர் துறப்பேனே அன்றி எதிரியுடன் சேரமாட்டேன். நீ சிரஞ்சீவி. அறவழியில் செல்பவன். இராமனைச் சேர்ந்திருப்பதுதான் உனக்குச் சிறப்பு. நிலையற்ற செல்வத்திற்காக நான் பகைவனைச் சேர மாட்டேன். நீ திரும்பிச் செல்'' எனக் கூறி விட்டான்.

விபீஷணன் திரும்பிச் சென்றான்.

போர் துவங்கியது.

கும்பகர்ணன் புயல் போல் போர்க்களத்தைக் கலக்கினான். பேய்க் காற்றும் பெருமழையும் போல் இருபடைகளும் கை கலந்தன. கும்பகர்ணன் குரங்குகளைப் பிடித்து வானத்திலெறிந்தான், உதைத்தான். மோதித் துவைத்தான், கையினால் நெருக்கினான். வாயிலே போட்டு மென்று துப்பினான். வானரப் படைக்குப் பெருத்த நாசம் விளைந்தது.

குரங்குகள் அவன் மீது பாய்ந்தன, கடித்தன, கூரிய நகங்களால் கீறின. நீலன் மலைகளை வீசினான். ஆனால் அவையெல்லாம் கும்பகர்ணனின் உடலிலே

பட்டதும் பொடிப் பொடியாகி விட்டன. கும்பகர்ணன் வீசியெறிந்த வயிரத் தண்டத்தைப் பற்றிக் கொண்ட அங்கதன் வீராவேசத்துடன் எழுந்தான். ஆனால் எவராலும் கும்பகர்ணனைச் சமாளிக்க முடியவில்லை. அநுமன்கூட அப்பால் சென்றுவிட்டான்.

''எங்கே அந்த இராம இலட்சுமணர்கள்?'' எனத் தோள் கொட்டி நின்றான் கும்பகர்ணன்.

விரைந்து வந்தான் இலட்சுமணன். நாணை வளைத்து ஒலியை எழுப்பினான். கணைகள் தீக்கங்குகள் போல் பாய்ந்து வந்தன. கரங்கள் துண்டிக்கப்பட்டு விழுந்தன.

அரக்கர் படை நிலை கெட்டோடத் துவங்கியது. இளையவனின் வில்லாண்மையைக் கண்டு வியந்தவனாய்க் கும்பகர்ணன் தன் தேரை அவன் முன்னே கொணர்ந்து நிறுத்தினான்.

இலட்சுமணன் அநுமனின் தோள்களிலேறிக் கொண்டான்.

''இராமனின் தம்பியே வா! நான் இராவணனின் தம்பி. எங்கள் உடன் பிறந்தவளின் மூக்கை அறுத்தவனல்லவா? உன் கரத்தை இதோ துண்டிக் கிறேன்'' எனக் கர்ஜித்தான் கும்பகர்ணன்.

''உனக்கு மறுமொழி வாயினாலன்று, வில்லினால் சொல்லுகிறேன்'' என்றான் இலட்சுமணன்.

இருவரும் போரிடத் துவங்கினர். கும்பகர்ணன் எய்த கொடுங் கணைகளெல்லாம் பயனற்றுப்





போயின. அவன் தேர் அழிந்தது. படை அழிந்தது. வில்லும் துண்டிக்கப்பட்டது. தேரை இழந்துவிட்ட கும்பகர்ணனுடன் தானும் தரையில் நின்று போரிடுவது தான் முறையென்று நினைத்தான் இலட்சுமணன்.

இதற்குள் செய்தி அறிந்த இராவணன் பெரும் படையை அனுப்பிவிட்டான். குரங்குகள் பயந்து விட்டன. ஆயினும் சற்றும் அஞ்சாது இலட்சுமணன் அரக்கர்களின் நடுவே பாய்ந்து அவர்களைக் கொல்லத் துவங்கினான். சுக்கிரீவனுக்கும் கும்பகர்ணனுக்கு மிடையே மீண்டும் கடுமையான யுத்தம் நடந்தது. இருவரின் உடலிலிருந்தும் குருதி பெருகியது. சுக்கி ரீவன் மூர்ச்சையடைந்து விட்டான். இந்தச் சுக்கி ரீவனை நாம் தூக்கிச் சென்றுவிட்டால் இன்றைய போர் முடிந்து விடும். தலைவனற்ற படை சிதறிவிடும் என எண்ணிய கும்பகர்ணன் சுக்கிரீவனைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். அரக்கர்கள் ஆரவாரம் புரிந்தனர். கும்பகர்ணனுடன் இனிப் போர் புரிவ தில்லை என வீரவாதம் புரிந்திருந்த அநுமன் திகைத்தான். என்ன செய்வது என அறியாதவனாய் அவனைத் தொடர்ந்து சென்றான்.

இராமனின் காதுகளுக்குச் செய்தி எட்டிவிட்டது. விரைந்து வந்தான். இலங்கையின் கோட்டைக்குள் புக முடியாதவாறு அம்புகளினால் கூடம் கட்டிவிட்டான். திகைத்தான் கும்பகர்ணன். திரும்பிப் பார்த்தவன் இராமனைக் கண்டான்.

இதழ்கள் துடிக்க, புருவங்கள் நெரிய ''என்னைக் கவந்தன், வாலி என நினைத்தா வந்தாய்? இந்தச்

சுக்கிரீவனைக் காக்க வந்தாயா? வா! வா! நானும் உன்னைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். என் பிடியிலிருந்து இவனை நீ மீட்டு விடுவாயென்றால் அத்துணை வலிமை உனக்குண்டென்றால் சீதையையும் நீ மீட்டு விடுவாய்?'' எனக் கர்ஜித்தான்.

இராமனின் உதடுகளில் புன்சிரிப்பு மலர்ந்தது. ''என் உயிர் நண்பனைத் தூக்கிச் செல்லும் தோளை வெட்டி வீழ்த்தாவிடில், வில்லைக் கரத்தில் ஏந்த மாட்டேன்'' என வீரவாதம் புரிந்தான் இராமன். கும்பகர்ணனின் நெற்றியைக் குறி பார்த்து இரு கூரிய அம்புகளை எய்தான். செங்குருதி பீறிட்டது. கும்பகர்ணன் மூர்ச்சையுற்றான். இதற்குள் மூர்ச்சை தெளிந்தெழுந்த சுக்கிரீவன் சினம் கொண்டவனாய் நினைவற்றுக் கிடந்த கும்பகர்ணனின் மூக்கையும் காதுகளையும் கடித்துப் பிய்த்துக் கொண்டு இராமனிடம் வந்து சேர்ந்து விட்டான். வானரப்படை மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

மூர்ச்சை தெளிந்தெழுந்த கும்பகர்ணன் தன் நிலைமையை உணர்ந்ததும் அடங்காக் கோபம் கொண்டான். கேடயத்தையும் வாளையும் கரத்தி லெடுத்தான். வீர கர்ஜனை புரிந்தான். வானரங்கள் நடுநடுங்கின. சில ஓடத் துவங்கின.

இராமபாணங்கள் பாய்ந்து வந்தன. கும்பகர்ணன் கேடயத்தினால் அவற்றைத் தடுத்து விட்டான். ஆயினும் இராமன் அவன் வாளைத் துண்டித்து விட்டான். அரக்கர் படையும் அழிக்கப்பட்டது.

தனித்து நின்ற கும்பகர்ணனை நோக்கி, ''கும்ப கர்ணா! படைகளை இழந்து நிற்கும் நீ விபீஷணனின் உடன் பிறந்தவன் என்பதினால், உயிரைத் தருகிறேன். இன்று சென்று நாளை வா!'' என்றான் இராமன்.

''அங்கங்களை இழந்துள்ள நான் மானமற்றவனாக இனி உயிர் வாழ மாட்டேன். உன் தோள்களைத் துண்டித்து, உயிரைக் குடித்து, என் அண்ணனின் மனம் மகிழ்ச்சியடைய சீதையை அவனுக்களிக்கவே நான் போர்க்களத்திற்கு வந்துள்ளேன். இனி மூக்கறுக்கப் பட்ட தங்கையைப் போல் நானும் அண்ணனின் முன்னே போய் நிற்பேனா? வீரனான நீ எனக்கு ஏற்ற சொற்களைக் கூறவில்லை'' என்று பதில் கூறிய கும்பகர்ணன் போருக்குச் சித்தமானான்.

இடக் கரத்திலே சூலத்தைத் தாங்கியவன் வலது கரத்தினால் பெரிய மலையொன்றை வீசினான். இராமன் மலையைப் பொடியாக்கி, சூலத்தை இரு துண்டாக்கினான். கும்பகர்ணனுக்குச் சிவபிரான் அளித்திருந்த கவசத்தைச் சிவபிரானின் கணையி னாலேயே இராமன் பிளந்து விட்டான். சூலத்தை இழந்த கும்பகர்ணன் தடிப்படையை எடுத்துக் கொண்டான். சூறாவளிபோல் குரங்குகளை அடித்து வீழ்த்தினான். அவனுடைய ஆற்றலையும் ஆண்மை யையும் கண்டு வியந்தான் இராமன். முறையே அவனுடைய கரங்களையும் கால்களையும் வெட்டித் தள்ளிவிட்டான்.

இனி இராவணனின் அழிவு நிச்சயம். தன் முடிவு காலம் கிட்டிவிட்டது என நினைத்த கும்பகர்ணன் இராமனை நோக்கி ''இராமா! தன்னைச் சரணடைந்த ஒரு புறாவிற்காகத் தராசின் தட்டிலே ஏறி அமர்ந்துகொண்ட சிபியின் வம்சத்தில் வந்தவனே! தீவினை எனக்கருதி எங்களைத் துறந்துவிட்ட என் தம்பி உன்னைச் சரணடைந்திருக்கிறான். அவனைத் காத்தருள். விபீஷணனை இராவணனிடமிருந்து நீ தான் காப்பாற்ற வேண்டும். இராமா! இன்னொரு வேண்டுகோள். என் தலையைத் துண்டித்துக் கடலிலே வீழ்த்திவிடு. என் முகத்தைப் பிறர் காணுவதை நான் விரும்பவில்லை'' என்றான்.

இராமன் கும்பகர்ணனின் விருப்பத்தை நிறைவேற்றினான். கும்பகர்ணன் இறந்தான். அன்றைய போர் முடிந்தது.

அரண்மனையிலிருந்த இராவணனுக்கு நிம்மதியில்லை. போர்துவங்கியதிலிருந்து அரக்கர்களுக்கு ஏற்பட்டுவரும் நாசத்தை அவன் உணராமலில்லை. ஆயினும் சீதையை மறப்பதென்பது அவனால் இயலவில்லை.

''அரசே! அந்தச் சீதை தங்களை மணக்குமாறு நானோர் உபாயம் தேடியுள்ளேன்'' என்றான் மகோதரன்.

இராவணனுக்கு ஒரே மகிழ்ச்சி.

''மருத்தனை ஜனகன் போல் உருவமெடுத்துக் கொள்ளச் சொல்வோம். நான் அவனைக் கட்டி ... முன்னால் வருகிறேன்.

... எழுந்தனர். இறைவரது திருக்கை தம்மைப் பற்றிக் கொண்டதால் நாயனார் மகிழ்ந்தார். "நீ செய்த செயல் நன்று!' நின் மனைவியுடன் என் உலகத்துக்கு வருக" என்று இறைவர் அருள் செய்தார்.

பெரியபுராணம்- ஆனாய நாயனார் புராணம் கதைச்சுருக்கம்.

## 20. ஆனாய நாயனார்

மழ நாட்டில் மங்கலம் என்ற ஊரில் ஆயர் குலத்தில் ஆனாயர் என்பவர் தோன்றினார். அவர் தம் ஏவலருடன் கூடிப் பசுக் கூட்டத்தைக் காட்டுக்குக் கொண்டு சென்று மேய்த்தும், இசை நூலில் கூறியபடி திருவைந்தெழுத்தைக் குழலில் இசைத்தும் வந்தார்.

கார் காலத்தில் ஒருநாள் அவர் பசுக் கூட்டங்களை ஓட்டிக் கொண்டு காட்டுக்குச் சென்றார். அங்கு ஒரு கொன்றை மரம். அது பூங் கொத்துக்களை உடையதாய்ச் சிவபெருமானைப் போன்ற தோற்றம் உடையதாய் விளங்கியது; அதைப் பார்த்தார். ஆனாயர் மனம் உருகினார். திருவைந்தெழுத்தைக் குழலிசையில் இசைத்தார். அந்த

இசை உயிர்களின் செவிகளில் தேவதாருவின் தேனை அமிழ்தத்துடன் கலந்து வார்த்ததைப் போல் விளங்கியது. புற்களை மேய்ந்த பசுக் கூட்டங்கள் அசை போடாமல் அவரை அடைந்து மெய் மறந்து நின்றன. பாலைக் குடித்துக் கொண்டிருந்த கன்றுகள் எல்லாம் பால் குடித்தலை விட்டு இசையைக் கேட்டு நின்றன. எருதுகளும் மான் முதலான விலங்குகளும் உடல் புளகித்து வந்து சேர்ந்தன. ஆடும் மயில் கூட்டங்களும் தம் ஆடலை மறந்து அவர் பக்கத்தில் வந்து சேர்ந்தன. மற்றப் பறவை இனங்களும் அவரது இசையால் உருகி நின்றன. மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடையர் அனைவரும் தொழிலை மறந்து இசையைக் கேட்டனர். வித்தியாதரர், சாரணர், கின்னரர், தேவர் முதலானவர் இசை கேட்க, விமானங்களில் ஏறி வந்தனர். தேவ மகளிர் தம் கையால் அமுது ஊட்டும் பவளவாய்க் கிளிகளுடன் விமானங்களி லிருந்து ஏழிசையைப் பாடுகின்றனர். பாம்பு, மயில், சிங்கம், யானை, புலி என்பவை தம் தம் பகையை மறந்து இசை கேட்டு ஒன்று சேர்ந்திருந்தன.

அந்த இசையைக் கேட்ட இறைவர் உமையொரு பாகராய்க் காட்சியளித்து, "நீ உள்ள இந்த நிலையிலேயே எம் உலகத்தை அடைவாயாக!" என்று அருள் செய்தார்.

# சீறாப்புராணம்

சுரத்திற் புனலழைத்த படலம்

680 முன்னிலை யாசு நடந்திட நடந்து
முதிரட விகள்கடந் ததற்பின்
றன்னிக ரில்லான் றிருவுளப் படியாற்
றரையினிற் ஜிபுறயீ லிறங்கி
யிந்நிலத் தெவர்க்குந் தெரிகிலா வண்ண
மிளம்பிடி யொட்டையொன் றெளிதாய்ப்
பன்னரும் பாதைத் தலைதடு மாறப்
பண்பொடு கொடுநடத் தினரே. 1.11.1

681 மட்டவிழ் புயத்தா னாசுமுன் னடத்தி
வந்தவொட் டகம்புது மையதாம்
பெட்டையொட் டகத்தைக் கண்டுபின் றொடரப்
பிசகின தருநெறி கானிற்
செட்டரு மெருதும் புரவியு மிடைந்து
சிறுநெறி வயின்வெகு தூர
மெட்டிமுன் னடப்பச் சிறுநெறி குறுகி
யிருந்ததுந் தேய்ந்தபோ யதுவே.
1.11.2

682 ஆசெனு மரச னொட்டகக் கயிற்றை
யசைத்திடுந் திசையெவா நடப்ப
வாசியு மெருதுங் கூன்றொறுத் தொகையும்
வழிகெடத் தனித்தனி மறுகத்
தேசிகர் கலங்கி யாமிதற் கென்கொல்
செய்குவ தெனமன மிடைந்து
வீசிய கானற் சுடச்சுடக் கருகி
விடர்விடும் பாலையி லடைந்தார்.

1.11.3

683 பின்னிய திரைவா ருதியினைச் சுவற்றிப்
பெரும்புறக் கடலினைத் தேக்கித்
துன்னகங் களித்து வடவையின் கொழுந்து
தனிவிளை யாடிய தலமோ
பன்னருந் தென்கீழ்த் திசையினன் றிரண்ட
படையொடு மிருந்தபா சறையோ
வுன்னதக் ககன முகடற வுருக்கு
முலைகொலோ வெனவறி கிலமால்.

1.11.4

684 பருத்திருந் தெழுந்து பறந்தசின் னிழலும்
பற்றறாக் கானலிற் றேய்ந்த
கரிந்திலை தோன்றா தொவ்வொரு விருக்கங்
கணங்களின் குலமெனத் தோன்று
மெரிந்தெரி மேய்ந்து கரிந்துவிண் ணிடங்காந்
திடுந்தரை யொருதுளி நீரு
மருந்திடக் கிடையா தலகைக டிரிந்தங்
காள்வழக் கற்றவெங் கானம்.

1.11.5

685 பாலையென் றுலர்ந்த செந்நிலக் கானற்
பரப்பினைப் புனலென வோடிச்
சாலவு மிளைத்துத் தவித்துழை யினங்க
டனித்தனி மறுகிய மறுக்க
மாலுளர்ந் திருண்ட புன்மனச் சிறியோர்
மருங்கினி லிரந்திரந் திடைந்து
காலறத் தேய்ந்த பலகலை மேலோர்
கருத்தினில் வருத்தமொத் தனவே.

1.11.6

686 கள்ளியின் குலங்கள் வெந்தொடுங் கினவேர்க்
கட்டையி னுட்டுளை கிடந்து
புள்ளிபூத் திருந்த பைத்தலைப் பாந்தள்
புறந்திரிந் துறைந்திடா திறந்து
முள்ளெயி றொதுங்கிச் செம்மணி பிதுங்கி
முளைதொறுங் கிடப்பதைச் செறிந்த
கொள்ளியிந் தனங்க ளென்றுழைக் குலங்கள்
குறுகிடப் பயந்துகான் மறுகும்.

1.11.7

687 மூவிலை நெடுவேற் காளிவீற் றிருப்ப
முறைமுறை நெட்டுடற் கரும்பே
யேவல்செய் துறைவ தலதுமா னிடர்கா
விடுவதற் கரிதுசெந் நெருப்புத்
தாவியெப் பொருப்புங் கரிந்தன சிவந்து
தரைபிளந் ததுவதிற் பிறந்த
வாவியோ வெழுந்த புகைபரந் ததுவோ
வறக்கொடுங் கானலென் பதுவே.

1.11.8

688 சேந்தெரி பரந்த பாலையிற் புகுந்து
சென்னெறி சிறிதுந்தோன் றாமற்
காந்தெரி கதிரோ னெழுதிசை தெற்கு
வடக்குமேற் கெல்லைகா ணாமன்
மாந்தரு மாவுந் திசைதடு மாறி
வாயினீ ரறவுலர்ந் தொடுங்கி
யேந்தெழில் கருகி மனமுடைந் துருகி
யெரிபடு தளிரையொத் திடுவார்.

1.11. 9

689 மன்னவ னாக முன்னடந் ததற்கோர்
வல்வினை பின்றொடர்ந் ததுவோ
வின்னைநா ளகில மடங்கலுந் தழலா
வெரிபடு காரணந் தானெோ
முன்னைநாள் விதியோ நகரைவிட் டெழுந்த
முகுர்த்தமோ பவங்கண்முற் றியதோ
பன்னுதற் கெவையென் றறிகுவோங் கொடியேம்
பாலையிற் படும்வர லாறே.

1.11.10

690 பாடுறு புனலறத் றொவ்வொரு காதம்
படுபரற் பரப்புநாற் றிசைக்கு
மோடுவர் திரும்பி மீள்குவ ரடிசுட்
டுச்சியும் வெதுப்புற வுலர்ந்து
வாடுவர் துகில்கீழ்ப் படுத்தியொட் டகத்தின்
வயிற்றிடை தலைநுழைத் திடுவார்
தேடிடும் பொருட்கோ வுயிரிழப் பதற்கோ
செறிந்திவ ணடைந்தன மென்பார்.

1.11.11
691 ஓங்கிய வுதய கிரிமிசை யெழுந்த
மதியென வொட்டகை யதன்மேல்
வீங்கிய புயமுங் கரத்தினி லயிலும்
வெண்முறு வலுமலர் முகமும்
பாங்கினிற் குளிர்ந்த வெண்கதிர் பரப்பப்
பரிமள மான்மதங் கமழத்
தாங்கிசை மறைதேர் முகம்மதும் பாலைத்
துன்புறா தின்பமுற் றனரே.
1.11.12
692 பாலையி லடைந்து பசியினா லிடைந்து
பலபல வருத்தமுற் றதுவும்
வேலைவா ருதிபோல் வழிபிழைத் ததுவும்
விழுந்தியான் முகமுடைந் ததுவுங்
கோலமார் புலிவந் ததுமுகம் மதையாங்
கூட்டிவந் துறுபவ மென்னச்
சாலவு முரைத்தா னீதியை வெறுத்த
தறுகணா னெனுமபூ ஜகிலே.
1.11.13
693 ஸூரிவெற் பனைய புயமுகம் மதுவை
முன்னிலைத் தலைவராய் நிறுத்தித்
தாரையிற் செலுநம் மிடர்களுந் தவிருந்
தழலெழும் பாலையுங் குளிர்ந்து
வேரியங் கமல வாவியங் கரையாம்
விரைவினிற் சாமடை குவமென்
றாரிதுக் குரைத்தார் தாதவிழ் மலர்த்தா
ரணிதிகழ் புயத்தபூ பக்கர்.
1.11.14
694 ஈதுநன் றெனவொத் தனைவரு மிசைத்தா
ரெழின்முகம் மதுவுமுன் னிலையாய்ப்
பாதையி னடப்பப் பெரியவ னருளின்
பணிகொடு ஜிபுறயீ லிறங்கிப்
பேதமற் றணுகி யொட்டகக் கயிற்றைப்
பிடித்தன ரரைநொடிப் பொழுதிற்
றீதற நெறியுங் தெரிந்தன நான்கு
திசைகளுந் தெளிதரத் தெரிந்த.

தலைமைமுன் னிலையாய் முஅம்மது நடப்பச்

சாருநன் னெறியினைச் சார்ந்தோம்
நிலமிசைக் கரிய மேகமொன் றெழுந்து
நிழலிவர்க் கிடுவதுங் கண்டோம்
மலைகடற் றிரைபோற் கானலில் வெதும்பி
யலைந்திடு வருத்தமுஞ் தவிரப்
புலனுறப் புனலும் பருகுவஞ் சிறிது
போழ்திலென் றனைவரும் புகன்றார்.

1.11.16

696 மந்தரம் பொருவா தெழுந்தபொற் புயத்து
முகம்மது மேருவா கனத்தின்
கந்தரக் கயிற்றை யசைத்திட வுளத்தின்
கருத்தறிந் தொட்டகங் களித்துச்
சுந்தரப் புவியில் வலதுகா லோங்கித்
தொட்டிடத் தொட்டவப் போதிற்
சிந்துநேர் கடுப்ப நுரைதிரை பிறங்கச்
செழித்தெழுந் ததுநதிப் பெருக்கே.

1.11.17

697 ஆறெழுந் தோடிப் பாலையைப் புரட்டி
யழகுறு மருதமா தாக்கத்
தேறல்கொப் பளித்து வனசமுங் குவளைத்
திரள்களும் குமுதமும் விரிய
வேறுபட் டுலர்ந்த மரமெலாந் தழைத்து
மென்றழை குளிர்தரப் பூத்துத்
தூறுதேன் றுளித்துக் கனிகளுங் காயுஞ்
சொரிதரச் சோலைசூழ்ந் தனவே.

1.11.18

698 வற்றுறாச் செல்வப் பெருக்கினி தோங்கும்
வருதையம் பதியுசை னயினார்
பெற்றபே றிதுகொ லெனமுழு மணியாய்ப்
பிறந்தமெய்த் துரையபுல் காசீஞ்
சுற்றமுங் கிளையுஞ் சிறப்பொடு தழைத்துச்
சூழ்ந்திருந் தணிதிகழ் வதுபோற்
குற்றமி னதியி னிருகரை மருங்குங்
குறைவறத் தளிர்த்தன தருக்கள்.

**1.11.19**

699 நானமும் புழுகும் பாளிதக் குலமு
நறைகெட மிகுந்தவா சமதாய்த்
தேனினுங் கருப்பஞ் சாற்றினுந் திரண்ட
தெங்கிள நீரினு மினிதா
வூனமி லதிய வொருகைநீ ரருந்தி
யுடல்குளிர்ந் தரும்பசி யொடுங்கி
யானனை மலர்ந்து முகம்மதைப் புகழ்ந்தங்
கனைவரு மதகளி றானார்.

# 8. தேம்பாவணி
## ( நீர் வரம் அடைந்த படலம் )

*- வீரமாமுனிவர்*

### நூல் அறிமுகம்

தேம்பாவணி வீரமாமுனிவரால் 18-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களுக்கு இணையான கிறித்தவக் காப்பியத்தை எழுத வேண்டும் என்ற முனைப்பு ஆசிரியரை இக்காப்பியம் படைக்கத் தூண்டியுள்ளது. சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், நைடதம், திருக்குறள் முதலிய நூல்களின் தாக்கம் தேம்பாவணியில் மிகுதியாகக் காணப்படுகிறது.

இயேசு கிருத்துவின் தந்தையான ஜோசப், காப்பியத்தின் தலைவராவார். அவரது வரலாறும் இயேசுவின் வரலாறும் கதையாக்கப்பட்டுள்ளன. ஜோசப்பின் சிறப்புப் பெயர் தேம்பாவணி என்று கூறப்படுகிறது. அப்பெயரே காப்பியப் பெயராக அமைந்துள்ளது.

தேம்பாவணி, தேன் + பா + அணி = தேன் போன்ற இனிய பாக்களால் அமைந்த நூல் என்றும் தேம்பா + அணி = வாடாத மாலை என்றும் பல பா மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை என்றும் பொருள் கொள்ளலாம்.

சூசை (ஜோசப்), மரியாள், திருமகன், பிறப்பு, இளமை, வளர்ச்சி, துறவுநிலை, சூசை மரியாள் திருமண வாழ்க்கை போன்ற பல செய்திகளைத் தேம்பாவணி விளக்கிச் சொல்கிறது. வீரமாமுனிவர் கதை நிகழ்ச்சிகளையும் இயற்கை வருணனைகளையும் தமிழ்மயமாக்கி உள்ளார். பாலஸ்தீன நாடும் எருசலேம் நகரும் தமிழ்நாட்டு வருணனையைப் பெற்றுள்ளன. குறிஞ்சி முதலான ஐந்து நிலங்களின் வளங்களும் தேம்பாவணியில் புனைந்துரைக்கப்பட்டுள்ளன. தேம்பாவணி வீரமாமுனிவரின் தமிழ்ப்புலமையைப் பறைசாற்றும் உன்னத காப்பியமாக அமைந்துள்ளது எனலாம்.

### நூலாசிரியர் குறிப்பு

மேலைநாட்டுக் கிறித்தவர்களுள் வீரமாமுனிவர் முதன்மையானவர். இத்தாலி நாட்டைச் சேர்ந்த இவர் சமயப் பணி செய்யும் பொருட்டு 1710 ஆம் ஆண்டு தன்னுடைய முப்பதாவது வயதில் தமிழகம் வந்தார். அன்று தொடங்கி தன் இறுதிக் காலம் வரை ஒரு தமிழராகவே வாழ்ந்து மறைந்தார். தமிழ்மீது கொண்ட பற்றால் கான்ஸ்டான்சியோ ஜோசப் பெஸ்கி என்ற தம் இயற்பெயரைத் தைரியநாதசுவாமி என்று வடமொழியில் அமைத்துக் கொண்டதைப் போல, வீரமாமுனிவர் என்று தமிழ்ப்படுத்திக் கொண்ட தமிழ் முனிவர் இவர். இத்தாலி, ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், பிரெஞ்சு, ஹீப்ரு, போர்ச்சுக்கீசியம், வடமொழி, தமிழ், தெலுங்கு எனப் பல மொழிகளில் புலமை பெற்றவர். இவருக்குத் தமிழைக் கற்பித்த ஆசிரியர் சுப்பிரதீபக் கவிராயர்.

வீரமாமுனிவர் தமிழில் பலதுறைகளில் முன்னோடியாகவும் பெரும்புலவராகவும் திகழ்ந்தார். இவர் இயற்றிய 'கொடுந்தமிழ்' பேச்சுத் தமிழ் இலக்கணத்திற்கு முன்னோடி. இவரது சதுரகராதி தமிழ் அகராதிகளுக்கு முன்னோடி. எள்ளல் சிறுகதைகளின் முன்னோடியாக இவர் இயற்றிய 'பரமார்த்த குரு கதை' விளங்குகிறது. இவர் தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தமும் செய்துள்ளார்.

வீரமாமுனிவர் எழுதிய இலக்கண நூல்கள் கொடுந்தமிழ், செந்தமிழ், கிலாவிஸ், தொன்னூல் விளக்கம் என்னும் நான்கு ஆகும். தேம்பாவணியைத் தவிர திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல நாயகி வெண்கலிப்பா, கருணாம்பரப் பதிகம், அன்னை அழுங்கல் அந்தாதி, தமிழ்ச் செய்யுள் தொகை, கித்தேரி அம்மாள் அம்மானை என்னும் சிற்றிலக்கியங்களையும் இயற்றியுள்ளார். ஞானக் கண்ணாடி, வாமன் கதை, தொன்னூல் விளக்கம் முதலான நூல்களையும் இயற்றியுள்ளார்.

வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், லூத்தர் இனத்தியல்பு, பேதகமறுத்தல் என்பன இவர் இயற்றிய உரை நூல்களாகும். சதுரகராதி, தமிழ்-லத்தீன் அகராதி, போர்ச்சுக்கீசியம் - தமிழ் - லத்தீன் அகராதி முதலிய அகராதிகளையும் இயற்றியுள்ளார். மொழிபெயர்ப்புத் துறையிலும் இவர் முன்னோடியாகத் திகழ்ந்தார். திருக்குறளின் அறத்துப்பாலும் பொருட்பாலும் இவரால் இலத்தீன் மொழியில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளன.

ஒப்பற்ற பல சிறப்புகளையும் மொழியறிவையும் பெற்றிருந்த வீரமாமுனிவர் 1747-ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மணப்பாட்டில் மறைந்தார்.

## நூல் அமைப்பு

வீரமாமுனிவர் தம் காப்பியத்தைத் தமிழ் காப்பிய அமைப்பு விதிகளை மீறாமல் அமைத்துள்ளார். இந்நூல் 3 காண்டங்களைக் கொண்டது. 36 படலங்களை உடையது. 'எனது தேம்பாவணியில் 3615 பாடல்களையும் 90 வகையான விருத்தங்களையும் அமைத்துள்ளேன்' என்று குறிப்பிடுகிறார் வீரமாமுனிவர். தேம்பாவணிக்கு முதல் உரை 1729 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகவும் 1851-ஆம் ஆண்டு புதுவை அச்சுக் கூடத்தில் முதல் முறையாக அச்சிடப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

## நூலின் சிறப்பு

சுகிர்தமேரி கூறிய வளவர் கதையினைக் தேம்பாவணி என்னும் சுவைமிக்க காவியமாக ஆக்கித் தந்துள்ளார். இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய வளவரின் (சூசையப்பர்) வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுகிறது. காப்பிய அமைப்பில் சீவகசிந்தாமணிக்கு ஒப்பானதாகும். கற்பனையில் கம்பராமாயணத்திற்கு நிகரானது. திருக்குறளின் கருத்துகள் நூல் முழுமையும் நிறைந்திருக்கின்றன. மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 விருத்தப்பாக்களையும் கொண்டது.

# கதைச்சுருக்கம்

## நீர் வரமடைந்த படலம்

இப்பகுதி தேம்பாவணியின் இரண்டாம் காண்டத்தில் அமைந்துள்ளது. திருமகனைப் போர்த்திய துணியைத் தாய் ஒரு தடாகத்தில் தோய்த்ததலால், அத்தடாகம் பிணி தீர்க்கும் வரம் பெற்றதைக் குறிக்கும் பகுதி இதுவாகும்.

சூசையும் மரியாளும் அவர்களது திருக்குழந்தையாகிய இயேசுவும் ஒரு அழகிய சோலையைக் கடந்து நெடுந்தூரம் சென்ற பின்னர் வளம் கொழிக்கும் ஓர் ஆற்றைக் கண்டு நின்றனர். அப்போது கபிரியேல் என்னும் வானவன் அங்கு தோன்றி அந்த ஆற்றின் வரலாற்றை அவர்களுக்குக் கூறினான்.

"இது எகிப்து அரண்மனையின் அருகே ஓடும் கையாறு என்னும் நதியாகும். முன்பு ஒரு காலத்தில் எகிப்து தேசத்தில் யூதர்கள் அடிமைப்பட்டுக் கிடந்த போது கொடுங்கோல் மன்னனான பார்வோம் 'யூதகுலத்தில் பிறந்த ஆண் குழந்தைகளையெல்லாம் வெட்டிக் கொல்லுங்கள்" என்று ஆணையிட்டான். அவன் கட்டளைப்படி வீரர்களும் குழந்தைகளைக் கொன்றனர். அப்போது ஒரு தாய் பெற்றெடுத்த ஓர் அழகிய குழந்தையை வீரர்கள் கண்டு; கொல்ல மனமின்றி, தாமே ஒரு பேழையைச் செய்து, அக்குழந்தையை அதில் இட்டு ஓடும் இவ்வாற்றில் விட்டனர். அப்பேழை அரண்மனையின் அருகே ஒரு நாணலில் சிக்கி நின்றது. அவ்வேளையில் அங்கு நீராட வந்த மன்னன் மகள் அப்பேழையைக் கண்டு அதனுள் இருந்த குழந்தையை பார்த்து மகிழ்ந்து 'இவன் என் மகன்' என்று அன்போடு எடுத்துச் சென்றாள். தன் தோழியரிடம் அவ்விளவரசி "இக்குழந்தைக்குப் பால் கொடுக்க ஒரு தாதியை அழைத்து வாருங்கள்" என்று பணிக்க, அவர்களும் ஒரு பெண்ணை அழைத்து வந்தனர்.

வந்த அந்தப் பெண் அது தனது குழந்தை என்பதைக் கண்டு உள்ளம் மகிழ்ந்து அதுபற்றி யாரிடமும் ஒன்றும் கூறாமல் அன்போடு பல நாள் வளர்த்தாள். அக்குழந்தை மோயிசன் என்று அழைக்கப்பட்டான். அரண்மனையில் சீரோடு வளர்ந்தான். பின் ஆண்டவன் கட்டளையால் தன் யூத மக்களை அடிமைத்தனத்தினின்றும் மீட்கப் பல காரியங்களைச் செய்தான். அத்தகைய மோயிசனைத் தன் அலைகளாகிய கைகளால் ஏந்தியதால் இந்த ஆறு கையாறு எனப்பட்டது! என்று வானவன் கூறினான்.

சூசையின் திருக்குடும்பம் அதன் பின்னர் அங்கிருந்து மேலும் தொடர்ந்து நடந்தனர். வழியில் மணம் வீசும் ஒரு மலர்த் தடாகத்தைக் கண்டு அதன் அருகே சென்றனர். அங்கு மலர்கள் பூத்துக் கிடந்தன. தேன் துளிர்த்து நின்றது. குயில்கள் பாடின. அவ்வினிய தடாக நீரை அவர்கள் பருகினர். பின்னர் மரியாள் தன் மகனைப் போர்த்தியிருந்த அழகிய ஆடையை அம்மலர்ச் சுனையிலே நனைத்துத் துவைத்தாள். திருமகனின் மேனியைப் போர்த்திய துணி பட்டதால் அத்தடாகம்,

அந்நீரை உண்ணும் யாவர்க்கும் நோயைப் போக்கும் வரத்தைப் பெற்றது. தடாகம் வரம் பெற்றதை அறிந்த மீன்களும் மலர்களும் மயில்களும் அன்னங்களும் மகிழ்ந்து களித்து ஆடின, பாடின. அக்காட்சியைக் கனிவோடு நோக்கிய திருக்குடும்பத்தினர் அதற்கு ஆசி கூறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

## சிறப்புச் செய்திகள்

தேம்பாவணி என்னும் ஒப்பற்ற காப்பியத்துள் அமைந்துள்ள "நீர் வரமடைந்த படலம்" என்னும் இப்பகுதி இரு நிகழ்ச்சிகளின் சிறப்பினை விளக்குவதாய் அமைந்துள்ளது. இப்படலம் இயற்கை வருணனைகளோடு சிறந்து விளங்குகிறது. எகிப்து தேசத்தில் ஓடும் நைல் நதியின் சிறப்பையே வீரமாமுனிவர் கையாறு எனப் பெயர் சூட்டி மகிழ்கின்றார். நீர் நிலைகள் புனிதமாகக் கருதப்படுவதும் அவற்றைப் பருகுவதும் நீராடுவதும் ஆன்மீக உலகில் காணப்படும் ஒன்றாகும். இயேசுவின் ஆடை பட்டதால் நீர்த்தடாகம் புனிதம் பெற்றதை இப்பகுதி நயமுடன் எடுத்துரைக்கிறது. மோயிசன் என்னும் புனிதனை ஏந்திய கையாறு, இறைமகனின் துணி தோய்க்கப்பட்டதால் வரமடைந்த சுனை ஆகியவை அழகுற வருணிக்கப்பட்டுள்ளன. இயற்கையைப் போற்றிப் பாடும் தமிழரின் மரபை அடியொற்றி வீரமாமுனிவரும் நீர்நிலைகள், பறவைகள் இவற்றை சுவைபட வர்ணித்துப் பாடியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.